**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 100/2022**
**நாள் 18/08/2025 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஜெயந்தி (DW1) | க/பெயர் – குமார் |
| வயது – 51 | தொழில் – |
| விலாசம் – சின்னம்பேடு கிராமம் | |

**குறுக்கு விசாரணை–**

1. நான் வாங்கிய கடனை திருப்பி கொடுத்துவிட்டதாக கூறியுள்ளேன் என்றும் அதற்காக ஆவணம் எதுவும் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. பணத்தை திரும்ப கேட்டு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் கடனை திருப்பி செலுத்திவிட்டேன் என சொல்லியுள்ளேன் என்றும் ஆனால் எழுதி கொடுத்த கடன்வுறுதி சீட்டை வாதியிடம் இருந்து திரும்ப பெறவில்லை என்றால் சரிதான். நான் ராஜேஸ்வரி என்பவரிடம் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன் கடனுறுதி பத்திரத்தை வீட்டில் இருந்து எடுத்து கொடுப்பதாக கூறினார், ஆனால் கொடுக்கவில்லை தற்கொலை செய்துக்கொண்டார். நான் பணத்தை திருப்பி செலுத்தியதற்கும் ராஜேஸ்வரி என்பவர் இறந்ததற்கும் இடையே எவ்வளவு காலம் இருக்கும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2. பணத்தை திருப்பி செலுத்திய பின்னரும் கடனுறுதி சீட்டை திருப்பி தரவில்லை என கூறி நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

வாதிக்கும் லட்சுமிபதி என்பவருக்கும் இடையே நீண்ட நாட்களாக சொத்து சம்மந்தமான பிரச்சனைகளும் அதற்காக வழக்குகளும் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் வாங்கிய கடனை திருப்பி செலுத்தவில்லை என்றும் ராஜேஸ்வரி என்பவர் இறந்துவிட்ட காரணத்தினால் பணத்தை திருப்பி செலுத்திவிட்டேன் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ராஜேஸ்வரியின் மகன்களுக்கு இடையே உள்ள சொத்து பிரச்சனைகளை வைத்துக்கொண்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**